# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES D.W.2
# OS.NO.21/2023

**Name** : Palani
**Father/Husband Name** : Kasi Gounder

**Age** : 53

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம்: 01.10 p.m

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு தாக்கல் செய்த வாதி எனக்கு தம்பி. 1வது பிரதிவாதி என் அண்ணன். நாங்கள் 3 பேரும் காசி கவுண்டர் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கில் 'A', B, C என்று காட்டப்பட்டுள்ளது என்றாலும் அந்த 3 சொத்துக்களிலும் 3 ஆக பிரித்து எங்களுக்குள் பாகம் கொடுக்க வேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். A schedule சொத்தானது கீழ் வடுகன்குட்டையிலும் B schedule சொத்தானது ஜாப்ராப்பேட்டை கிராமத்திலும் C schedule சொத்தானது 100 பீடி கிளை என்றால் சரிதான். A schedule சொத்து என் தந்தையாருக்கு பாகம் மூலம் வந்தது என்றால் சரிதான்.

என் அப்பாவுக்கு பாகம் வந்த சொத்தை அவர் இறக்கும் வரை எழுத்து மூலமாக உயிலோ அல்லது பத்திரமோ எழுதி தரவில்லை. அவர் அவ்வாறு எதுவும் எழுதி தராததால் எங்கள் 3 பேருக்கும் 3 ல் 1 பாகம் என்றால் சரிதான். ( சாட்சி சொல்கிறார் வாய்மொழியாக தான் கொடுத்துள்ளார்) அதற்கு ஆதாரம் இல்லை.

A schedule சொத்தில் 3 ல் 1 பாகம் வாதிக்கு உரிமையானது என்றால் சரிதான். B schedule சொத்தானது வாதி மற்றும் நான், என் அண்ணன் ஆகிய 3

பேரும் கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் எங்களுக்குள் எழுத்து மூலமாக பாகம் ஆகவில்லை என்றால் சரிதான். எனவே 3 ல் 1 பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்றால் சரிதான், அவர் அப்போது கேட்காமல் விட்டுவிட்டார். ஆனால் 20 வருடத்திற்கு முன்பாக வாய்மொழியாக பிரித்து கொடுத்தார், அதற்கு எழுத்து மூலமாக ஆதாரம் இல்லை என்றால் சரிதான்.

தற்போது 3 பேரும் கூட்டாக உள்ள சொத்தில் 3 ல் 1 பாகம் கொடுக்க கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். வாய்மொழியாக பிரித்ததால் எங்களுக்கு தனித்தனியாக பட்டா வரவில்லை என்றால் சரிதான். இதன்படி A schedule மற்றும் B schedule பிரித்து கொடுக்க எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல, சில சொத்துக்களை வாய்மொழியாக கொடுத்துவிட்டார்.

C schedule சொத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு தலா 3 ல் 1 பாகம் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களை எழுத்து மூலமாக பிரித்து கொடுக்காததால் தாவா படி தீர்ப்பாகத்தக்கது என்றால் சரியல்ல.

<u>விசாரணை முடிந்த நேரம்</u> : 01.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.01.22 18:49:44 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.